<u>கொடைக்கானல் நகராட்சி</u>

1920ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், அட்டவணை III–ன் பிரிவு 2–ன் கீழ் 17.11.2022ஆம் நாள் வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும். அது சமயம் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/– பா. செல்லத்துரை,
நகர்மன்றத் தலைவர்,
கொடைக்கானல் நகராட்சி.

நாள்.16.11.2022

**பொருள் எண் – 1)**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சாலை ஓரத்தில் சுற்றலாப் பயணிகளின் நலன்கருதி, சாலை ஓரங்களில் சட்ட விரோதமான ஆக்கிரமிப்புகள் அமைப்பதை தடுக்கும் பொருட்டும், சாலையினை பாதுகாக்கும் பொருட்டும் தரை வாடகை அடிப்படையில், சாலிகா பெட்ரோல் பங்க் அருகில் மற்றும் உகார்தேநகர் பகுதியில் கோடை கேட் கீழ்புறம் கடைகள் அமைத்து குத்தகைக்குவிட நகர்மன்றத் தலைவர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.1680, நாள்.15.02.2006 மற்றும் நகர்மன்றத் தீர்மானம் எண்.1032, நாள்.30.05.2014ன் அடிப்படையில் ஒதுக்கீடு செய்ததைப் போன்று சாலிகா பெட்ரோல் பங்க் அருகில் மற்றும் உகார்தேநகர் பகுதியிலுள்ள கோடை கேட் கீழ்புறம் சாலை ஓரங்களில், சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதியும் ஆக்கிரமிப்புகளை தவிர்க்கும் பொருட்டும், நகராட்சியின் நிதிநிலையினை மேம்படுத்தும் பொருட்டும், போக்குவரத்திற்கு இடையூறின்றி அரசு விதிகளுக்குட்பட்டு தரை கடைகள் (தற்காலிக கடைகள்) அமைத்து குத்தகைக்குவிட நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **197, நாள். 17.11.2022** |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 2)**

கொடைக்கானல் நகராட்சிக்குச் சொந்தமான ஒன்பதாண்டு மற்றும் மூன்றாண்டு குத்தகை இனங்களுக்கான பொது நிபந்தனைகள் மற்றும் சிறப்புக் கட்டுப்பாடுகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. மேலும், குத்தகை இனம் பற்றிய அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிடவும் மற்றும் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும் அதற்காகும் கட்டணம் மற்றும் இதர செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **198, நாள். 17.11.2022** |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 3)**

கொடைக்கானல் நகராட்சிக்குச் சொந்தமான கவிதியாகராஜர் சாலையில் அமைந்துள்ள 16 அறைகள் கொண்ட தங்கும் விடுதி கட்டணம் வசூல் செய்யும் உரிமம் வருகின்ற 31.12.2022 உடன் முடிவடைவகிறது. எனவே, 01.01.2023 முதல் 31.12.2025 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு குத்தகைக்கு விட நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு –மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | 199, நாள். 17.11.2022 |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 4)**

கொடைக்கானல் நகரம் ஓர் சர்வதேச சுற்றுலாத் தலமாகும், இங்கு ஆண்டுதோறும் சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்து வருகிறது. இதனால் பொது மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்திதருதல் நகராட்சியின் கடமையாகும். இந்நகராட்சியில் அடிப்படை வசதிகள் அதிகளவில் ஏற்படுத்திதர நகராட்சி வருவாய் போதுமானதாக இல்லை.

எனவே, அண்ணாசாலையில் அமைந்துள்ள நகராட்சிக்குச் சொந்தமான 12 நகராட்சி பணியாளர் குடியிருப்புகள் தற்போது எவ்வித பயன்பாடுமின்றி கட்டிடம் முழுவதும் சேதமடைந்துள்ளது. மேலும், மேற்கூரை பகுதி மழையின்போது ஒழுகி உட்புறத்தில் நீர் தேங்குவதால் துர்நாற்றம் வீசுவதோடு, பொது சுகாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தியும், சமூக விரோதச் செயல்களும் ஏற்பட்டு வருகிறது. இக்கட்டிடத்தினால் தற்போது எவ்வித வருவாயும் நகராட்சிக்கு வருவதில்லை. எனவே, மேற்கண்ட கட்டிடத்தை வருவாய் ஈட்டும் வகையில் நகராட்சி வருவாயினை பெருக்கும் பொருட்டு, குத்தகைக்கு விடக்கோரி நகர்மன்றத் தலைவர் அவர்களால் கோரப்பட்டுள்ளது.

மேலும், இதே போன்று நகராட்சிக்கு சொந்தமான கவி தியாகராஜர் சாலையில் அமைந்துள்ள எட்டு அறைகள் கொண்ட தங்கும் விடுதி மற்றும் அண்ணா சாலையில் உள்ள ஐந்து அறைகள் கொண்ட தங்கும் விடுதி ஆகியவை பயன்பாடு அற்ற நிலையில் உபயோகப்படுத்துவதற்கு இயலாத நிலையில் இருந்து வந்ததை நகர்மன்றத் தீர்மானம் எண்.947 மற்றும் 948, நாள்.13.01.2014ன்படி அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.03.07.2007ல் சொல்லப்பட்டுள்ள கொள்கை கோட்பாட்டிற்கு உட்பட்டு அரசின் கொள்கைக்கு குந்தகம் ஏற்படாத வகையில் நகராட்சிக்கு கட்டுப்பட்ட அசையா சொத்துகளை பாதுகாப்பதோடு அவற்றை பயனுடையதாகவும் செயல்படுத்தி அதன் மூலம் நகராட்சிக்கு வருமானம் வரக்கூடிய அளவிற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரி குத்தகைதாரரிடம் ஒப்படைக்கப்பட்டு அதன் மூலம் நகராட்சிக்கு வருவாய் ஈட்டபட்டு வருகிறது.

மேற்கண்ட அண்ணாசாலை பகுதியில் அமைந்துள்ள நகராட்சிக்குச் சொந்தமான 12 நகராட்சி பணியாளர் குடியிருப்புகளை (உள்ளது உள்ளபடியே) தற்போது உள்ள கட்டிடத்தின் அமைப்பில் எவ்வித மாறுதலும் இல்லாமல் (Without any Structural Modification) குத்தகைதாரர்களது சொந்த செலவில் தங்கும் விடுதியாக, பொதுமக்கள் மற்றும் சுற்றுலாபயணிகள் பயன்பெறும் வகையில் மேற்கண்ட கட்டிடத்தை பயன்படுத்தி கொள்ள அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.03.07.2007ல் சொல்லப்பட்டுள்ள கொள்கை கோட்பாட்டிற்கு உட்பட்டு அரசின் கொள்கைக்கு குந்தகம் ஏற்படாத வகையில் நகராட்சிக்கு கட்டுப்பட்ட அசையா

சொத்துகளை பாதுகாப்பதோடு அவற்றை பயனுடையதாகவும் செயல்படுத்தி அதன் மூலம் நகராட்சிக்கு வருமானம் வரக்கூடிய அளவிற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரி மாத வாடகை அடிப்படையில் குத்தகைக்குவிட மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1. நகராட்சிக்குகட்டுப்பட்ட அசையாசொத்துகளை பாதுகாப்பதோடு, நகராட்சிக்கு வருமானம் ஈட்டக் கூடியதாகவும் உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.
2. குத்தகை இனங்களுக்குரிய சிறப்பு கட்டுப்பாடுகள் மற்றும் பொது நிபந்தனைகளுடன் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1094/2022/அ3)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **200, நாள். 17.11.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 5)**

கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.22 உகார்தே நகர் பகுதியில் மழைநீர் கடந்து செல்ல பாலம் இல்லாததால் மழை காலங்களில் அதிகளவில் மழைநீர் சாலைகளில் வடிந்தோடுகிறது. இதனால் சாலைகள் சேதமடைவதுடன் போக்குவரத்து துண்டிப்பு ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இதனை தவிர்க்கும் பொருட்டு உகார்தே நகர் பகுதியில் சிறு பாலம் அமைத்திட பொது நிதியின் மூலம் ரூ.11.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **201, நாள். 17.11.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 6)**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னைஅவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21787/2021/EA2 நாள்.02.10.2021ன் படி நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு பள்ளி மற்றும் நகராட்சி பள்ளிகளில் கல்வி நிதியின் கீழ் 2022–2023ம் ஆண்டிற்கு நான்கு பள்ளிகளில் கழிவறைகளை ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை பணியமர்த்தி மேற்கொள்வதற்கு நகர்மன்றத்தில் அனுமதி பெறப்பட்டு (நகர்மன்ற தீர்மான எண்.102 நாள்.24.06.2022) ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.P.சுரேஷ் குமார் ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்குவதற்கு நகர் மன்றத்தில் அனுமதி பெற்று (நகர் மன்ற தீர்மானம் எண்.116 நாள்.01.08.2022) மேற்கண்ட ஒப்பந்ததாருக்கு 08.07.2022–ம் தேதி 21.07.2022 முதல் 20.10.2022 வரை மூன்று மாதங்களுக்கு (91 நாட்களுக்கு) வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட ஒப்பந்ததாரரின் பணி உத்தரவு காலம் மூன்று மாதம் முடிவுற்றதால் ஒப்பந்ததாரர் பணி உத்தரவு காலத்தை பள்ளி குழந்தைகளின் நலன் கருதியும் பொது சுகாதாரம் பணிகள் குறித்தும் மீண்டும் இரண்டு மாதத்திற்கு நவம்பர்–2022 மற்றும் டிசம்பர்–2022 நீட்டிப்பு வழங்கக் கோரி துப்புரவு ஆய்வாளர்கள் குறிப்பு வழங்கியுள்ளார்கள். ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்பந்த நிபந்தனைகளின் படியும் பணி உத்தரவுப்படி அரசு பள்ளிகள் மற்றும் நகராட்சி பள்ளிகள் நவம்பர்–2022 மற்றும் டிசம்பர்–2022 வரை இரண்டு மாதங்களுக்கு அதே

ஒப்பந்தத்தாருக்கு அதே விலை விகிதத்தில் பணிகள் மேற்கொள்வதற்கு பணி நீட்டிப்பு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதாரம் நலன்கருதி அவசரம் அவசியம் கருதி நகர் மன்றத்தின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண். 3140/2016/எச்1)

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **202, நாள். 17.11.2022** |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 7)**

கொடைக்கானல் நகர்மன்ற கூடத்தின் வெளிப்புறத்தின் மேற்பரப்பில் மேற்கூரை இல்லாத காரணத்தினால் அதிகப்படியான மழைக்காலஙகளில் மழை நீர் வடிவதுடன், மரக்கிளைகளும் ஒடிந்து விழுகிறது. இதனால் இங்கு நிறுத்தப்பட்டுள்ள வாகனஙகள் சேதமடைகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு நகர்மன்ற கூடத்தின் அருகில் மேற்கூரை அமைத்திடவும், நகர்மன்ற தலைவர் வாகனத்தினை நிறுத்த, வாகன நிறுத்தம் அமைத்திடவும் வேண்டியுள்ளதால், பொது நிதியின் கீழ் ரூ.14.00 இலட்சத்திற்கு இப்பணியினை மேற்கொள்வதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பிட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **203, நாள். 17.11.2022** |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

.......

**பொருள் எண் – 8)**

கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள பழனி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் அலுவலக அறைக்கு தேவையான தேக்கு கதவு மற்றும் ஜன்னல்கள், ரோலிங சட்டர் அமைத்தல், மற்றும் அண்ணாசாலையில் அமைக்கப்பட்ட தற்காலிக கடைகளுக்கு தளம் அமைத்தல் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் படி நகராட்சி ஒப்பந்ததாரர் திரு பி. அரசகுமார் மூலம் செய்து முடிக்கப்பட்டது என்ற விபரம் மன்றத்தின் தகவலுக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | கொடைக்கானல் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலகத்திற்கு தேவையான கதவு, ஜன்னல் அமைக்கும் பணி மற்றும் அண்ணா சாலையில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கடைகளுக்கு தளம் அமைத்தல் பணி | **5.00** |

அலுவலக குறிப்பு. பதிவு செய்யலாம்.

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **204, நாள். 17.11.2022** |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | பதிவு செய்யப்பட்டது. |

**பொருள் எண் – 9)**

கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தின் மராமத்து மற்றும் கூடுதல் பணிகள் மேற்கொள்ளுதல், அம்ரூட்.20 ன் கீழ் ஜிம்கானா பகுதியில் பூங்கா அமைத்தல் மற்றும் மனோரத்தினம் சோலையில் கூடுதல் நீரினை தேக்கி வைத்திட திட்ட வடிவமைப்பு மற்றும் விரிவான திட்ட பிரேரணை (Soil Test, Structural Design, DPR, Drawings) தயார் செய்து அரசுக்கு சமாப்பிக்க;ர அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் கீழ்க்கண்ட பணியானது செய்து முடிக்கப்பட்டது. கொடைக்கானல் நகராட்சியில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் செய்து முடிக்கப்பட்டுள்ள பணியின் விபரம் மன்றத்தின் தகவலுக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் விபரம் |
|---|---|
| 1 | கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தின் மராமத்து மற்றும் கூடுதல் பணிகள் மேற்கொள்ளுதல், அம்ரூட்.20 ன் கீழ் ஜிம்கானா பகுதியில் பூங்கா அமைத்தல் மற்றும் மனோரத்தினம் சோலையில் கூடுதல் நீரினை தேக்கி வைத்திட திட்ட வடிவமைப்பு மற்றும் விரிவான திட்ட பிரேரணை ( Soil Test, Structural Design, DPR, Drawings) தனியார் திட்ட ஆலோசகர் மூலம் மேற்கொள்ளுதல். **மதிப்பீடு மொத்தம் ரூ.7.00 இலட்சம்.** |

அலுவலக குறிப்பு. 1) மன்றம் பதிவு செய்யலாம்.

2) உத்தேச மதிப்பீட்டு தொகையான ரூ.425.00 இலட்சத்தில் திட்ட தயாரிப்புக்காக 1.65 விழுக்காடு தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **205, நாள். 17.11.2022** |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 10)**

சாலையோர வியாபாரிகள் வாழ்வாதார ஒழுங்குமுறை மற்றும் உற்பத்தி விதிகள் 2014ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகள் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் ந.க,எண்,20789/2021/UPA1. நாள்.20.9.2021ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, சாலையோர வியாபாரிகளுக்கு தள்ளு வண்டி வழங்க ஏதுவாக கீழ்க்கண்ட விபரப்படியான தேர்வு செய்யப்பட்ட இடங்கள் மற்றும் அதற்கான திட்ட பிரேரணைகள் தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநகர் மதுரை வழியாக நகராட்சிநிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

9.3.2022ம் தேதிய நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி, 29.03.2022ம் தேதிய நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணைக்கடிதம் ந.க.எண்.20789/2021/UPA!. நாள்.29.3.2022ல் தேர்வு செய்யப்பட்ட இடங்களில் சாலையோர வியாபாரிகளுக்கு வாழ்வாதார தள்ளுவண்டிகள் வழங்கவும், அதற்கான தொகையினை விடுவித்தும், வரப்பெற்ற உத்தரவின் பேரில், 203 தள்ளுவண்டிகள் ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்ததாரர் மூலம் செய்யப்பட்டு பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட தள்ளுவண்டிகளை ஏற்கனவே தேர்வு செய்யப்பட்டுள்ள கீழ்க்கண்ட விபரடியான இடங்களில் சாலையோர வியாபாரிகளுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1) பசுமை பள்ளத்தாக்கு
2) கோக்கர்ஸ் வாக்
3) கே.ஆர்.ஆர்.கலையரங்கம் (லேக் ரோடு)

4) பிரையண்ட் பார்க்

5) மூஞ்சிக்கல்

6) ரோஸ் கார்டன்

7) சில்வர் பால்ஸ்

அலுவலக குறிப்பு – 1. அனுமதிக்கலாம்.
2. பட்டியல் பார்வையிடப்பட்டது.
(ந.க.எண்.3859/2014/எப்1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **206, நாள். 17.11.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் – 11)**

அருட்திரு.இ.பீட்டர் சகாயராஜ், பங்குத்தந்தை அற்புத குழந்தை இயேசு ஆலயம், உகார்த்தேநகர், கொடைக்கானல் என்பவர் 29.3.2021ம் தேதிய மனு மூலம் வார்டு–D. பிளாக் எண்.12, நகரளவு எண்.135/2 மற்றும் 135/3–ல் உகார்த்தேநகர் பகுதியில் தரைத்தளம் 277.74 ச.மீ முதல் தளம் 521.51 ச.மீ. மற்றும் இரண்டாம் தளம் 249.82 ஆக மொத்தம் 1049,07 ச.மீ பரப்பளவில் ஆலயம் கட்டப்பட்டுள்ளதற்கு கட்டிட அனுமதி கோரி விண்ணப்பம் சமர்ப்பித்தார்.

தற்போது முழுமைத்திட்ட வழிகாட்டுதலின்படி மத சம்மந்தப்பட்ட வழிபாட்டு கட்டிடங்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பாக தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் மனையிடம் கட்டிட விதி 1993 பிரிவு 6–ன்படி, மாவட்ட ஆட்சியர் அவர்களின் தடையின்மைச்சான்று கோரி கடிதம் அனுப்பப்பட்டது.

மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் அவர்களின் தனது கடிதம் ந.க.எண்.5960/2022/சி2, நாள்.8.7.2022 தேதிய கடிதத்தில் அற்புத குழந்தை இயேசு வழிபாட்டு தளத்தினால் இடையூறு உள்ளதா? என்பது குறித்து அறிக்கை கோரியுள்ளார்.

மேற்படி கட்டிடமானது அனுமதியற்ற கட்டிடமாக இருந்துள்ளது விசாரணையின் மூலமும், கோப்புகளின் மூலமும் தெரிய வந்துள்ளது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை அமர்வின் உத்தரவின்படி விதிமுறைகளுக்கு மாறாக கட்டியுள்ள கட்டிடங்களை பூட்டி சீல் வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அரசாணை எண்.48, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.9.3.2020ன்படி இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1350/2020/எப்1, நாள்..30.11.2022–ன் மூலம் முழுமைத்திட்டத்தின்படி கட்டிடத்தை முறைப்படுத்தி கொள்ள மனுதாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

அதன்பேரில் மனுதாரர் மனு செய்துள்ளார். மேற்படி அற்புத குழந்தை இயேசு ஆலயம் கட்டப்பட்டு சுமார் 10 ஆண்டுகள் ஆகிறது என விசாரணையில் தெரிகிறது. இந்த ஆலய செயல்பாட்டினால் அப்பகுதி பொதுமக்களுக்கு எந்தவொரு இடையூறு இருப்பதாக கூறி எந்தவொரு புகார் மனுவும் பெறப்படவில்லை. முழுமைத்திட்டத்தில் ஆலயம் இடம் கல்வி உபயோக பயன்பாட்டு மண்டலத்தில் உள்ளது. பக்கம் 105 பத்தி 6–ல் கண்டுள்ளபடி, தடைசெய்யப்பட்ட பகுதியை தவிர பிற பகுதிகளில் மாவட்ட ஆட்சியரிடம் NOC பெற்று மதம் சார்ந்த கட்டிடங்களுக்கு அனுமதி வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த ஆலய கட்டிடத்திற்கு ஆட்சேபனையின்மை சான்று பெறவும் மாவட்ட ஆட்சித்தலைவர் NOC பெற்றபின், 4 துறைகளின் NOC பெற்று கட்டிட

திட்ட அனுமதி பெற தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு –மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | 207, நாள். 17.11.2022 |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/–பா.செல்லத்துரை
நகர்மன்றத் தலைவர்,
கொடைக்கானல் நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.